தகவலறியும் உரிமை

‘தகவலறியும் உரிமை’ என்பது யாது?

தகவலறியும் உரிமைச் சட்டத்தில் இலக்கம் 1 எனக் குறிப்பிட்டுள்ளவாறு பகிரங்க அதிகாரசபையில் இருந்து தகவல்களைக் கோருவதற்கான உரிமை ‘தகவலறியும் உரிமை’ எனக் கருதப்படுகிறது.

தகவலறியும் உரிமை தொடர்பான இலங்கைச் சட்டம் யாது?

- 14அ அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாக உறுப்புரை 19இல் உள்ளவாறு
- 2016 இன் 12 ஆம் இலக்க தகவறியும் உரிமைபற்றிய சட்டமாகும்.

சட்டத்திற்கு அமைய ‘தகவல்கள்’ என்பவை?

சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகவல் என்பவை:

“குறிப்புக்கள், ஆவணங்கள், மனுக்கள், மின்னஞ்சல்கள், கருத்துக்கள், ஆலோசனைகள், ஊடக அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், கட்டளைகள், குறிப்புப் புத்தகங்கள், உடன்படிக்கைகள், அறிக்கைகள், செய்திப் பத்திரிகைகள், மாதிரிகள், மாதிரிப் படிவங்கள், பரிமாறப்படும் கடிதங்கள், பத்திரங்கள், சட்டவரைவுகள், புத்தகங்கள், வரைபடங்கள், ஓவியங்கள், உருவங்கள், உருவ அல்லது வரைவுகள், வரைவு வேலைகள், நிழற்படங்கள், நெகடிவ்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், வீடியோ நாடாக்கள், இயந்திரங்கள் மூலம் வாசிக்கக்கூடிய அறிக்கைகள், கணனி அறிக்கைகள் மற்றும் வேறு ஆவணப்படுத்தப்பட்ட பொருட்கள் உட்பட ஏதோவொரு வகையில் எழுத்துமூலம் பதிவுசெய்யப்படும் பொருட்கள் மற்றும் அவற்றின் பிரதிகள்” என்பனவாகும்.

பகிரங்க அதிகாரசபை என்பது யாது?

பொதுமக்களின் வரிப்பணத்தில் பராமரிக்கப்படும் அரசுக்குரிய அனைத்து நிறுவனங்களும் அரசினால் நிருவகிக்கப்படுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் அனைத்து நிறுவனங்களும், எந்தவொரு எழுத்துமூல சட்டத்தின் கீழாயினும் அடையாளப்படுத்தப்படும் அல்லது உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ள அல்லது பூரணமான அல்லது பகுதியான அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனத்திடம் இருந்து உதவிபெறும் பொது சேவையை வழங்கும் தனியார் நிறுவனமும் இவ்வகையைச் சார்ந்தவை.

உதாரணம். அமைச்சுக்கள் திணைக்களங்கள், உள்ளூராட்சிச் சபைகள், பிரதேச செயலகங்கள்.

தகவல் அதிகாரி என்பவர் யார்?

நீங்கள் தகவல் கோரிக்கையை முன்வைக்கும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட பகிரங்க அதிகாரசபையினுள் உங்களோடு முதன்முதலில் தொடர்புகொள்பவர் தகவல் அதிகாரியாவார். நீங்கள் கோரும் தகவல்களை உங்களுக்கு வழங்க வேண்டியது அவருடைய பொறுப்பாகும்.

தகவல் அதிகாரிமீது ஒப்படைக்கப்படும் பொறுப்புக்கள் யாவை?

- தகவல் அதிகாரியினால் தகவல்களைக் கோரும் நபருக்கு அவசியமான சகல ஒத்துழைப்பும் வழங்கப்பட வேண்டும்.
- ஏற்புடைய கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட மையைக் குறித்து ஒரு பற்றுச்சீட்டு வழங்குதல்.
- ஏற்புடைய கோரிக்கைக்கு உரிய காலத்தில் பிரதிபலிப்பைக் காட்டுதல், அதற்கு கூடிய காலம் அவசியமாயின் அதனை தகவல் கோருபவருக்கு அறிவித்தல் வேண்டும்.
- ஏற்புடைய கோரிக்கை வாய்மொழிமூலம் மேற்கொண்டிருப்பின் அதனை எழுத்து வடிவில் அமைத்தல்.
- தகவல் கோரிக்கைக்கான கோப்பொன்றைப் பராமரித்தல்.
- தகவல் கோரிக்கைகளுக்கான உரிய பிரதிபலிப்பு காட்டுவதற்கு அவசியமாயின் ஏனைய அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதும் இவ்விடயத்தில் ஏற்றது.

‘பெயர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி’ என்பவர் யார்?

பகிரங்க அதிகார சபையின் முதல் மேன்முறையீட்டிற்கான அதிகாரத்தை வகிப்பவர் பொது அதிகாரசபையின் முதலாவது மேன்முறையீட்டு அதிகாரத்தைக் கொண்டவர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி என அழைக்கப்படுவார். தகவல் அதிகாரியின் பிரதிபலிப்பைக் காட்டுதல் / காட்டாமை பற்றி நீங்கள் திருப்தியடையாதுவிடின், நீங்கள் பெயர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் மேன்முறையீட்டைச் செய்யலாம்.

பெயர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிமீது ஒப்படைக்கப்படும் பொறுப்புக்கள் யாவை?

குறிப்பிட்ட கால எல்லையினுள் பதில் அனுப்பப்படுமேயாயின், பெயர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் உங்களது மேன்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பிட்டதொரு பகிரங்க அதிகாரசபையினால் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாத சந்தர்ப்பங்களில் பிரஜை ஒருவர் என்ன செய்ய முடியும்?

சட்டத்தின் 23 ஆவது வாசகத்திற்கமைய, தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாத சந்தர்ப்பங்களில் பகிரங்க அதிகாரசபையின் பிரதானி அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரி மேற்படி பொது அதிகாரசபையின் தகவல் அதிகாரியாக இயல்பாகவே செயற்படுவார்.

தகவல் கோரிக்கையை யார் மேற்கொள்ள முடியும்?

இலங்கைப் பிரஜைகள் மாத்திரமே தகவல்களைக் கோரமுடியும். இதன்போது பிரஜை என்பவர், குறிப்பிட்டதொரு சட்டவாக்க அல்லது சட்டவாக்கம் பெறாத சபையின் அங்கத்தவர்களில் ¾ க்கு குறையாத எண்ணிக்கையினர் பிரஜைகளாயின், அத்தகைய சபையும் உள்ளடக்கப்படும்.

தகவல் கோரிக்கை மேற்கொள்ளப்படும்போது அதற்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டுமா?

இல்லை. இத்தகைய அவசியம் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் தகவல்களைக் கோருவதற்கான காரணத்தை வெளியிடுமாறு எந்தவொரு நபரும் உங்களை நிர்ப்பந்திக்க முடியாது.

குறிப்பிட்டதொரு கோரிக்கை பற்றிய தீர்மானத்தை மேற்கொள்வதற்கு உள்ள காலவரையறை யாது?

i. தகவல் அதிகாரி இயன்றளவு விரைவாக உங்களது தகவல் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ii. மேற்படி தகவல்களைத் துரிதமாக வழங்க முடியுமாயின் அத்தகைய தகவல்களை இயன்றளவு விரைவில் வழங்க வேண்டும்.

iii. தகவல் அதிகாரியினால் **14 நாட்களுக்குள்** மேற்படி பகிரங்க அதிகாரசபையினால் உங்களுக்கு மேற்படி தகவல்கள் வழங்கப்படுமா என்பது பற்றியாயின் நீங்கள் குறிப்பிட்ட முறைமைக்கமைய தகவல்களைப் பெறுகையில், நீங்கள் செலுத்த வேண்டிய பணம் என்பவை பற்றியும் உங்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

தகவலறியும் சட்டத்திற்கமைய பிரஜைகளுக்கு வழங்க முடியாத தகவல்கள் யாவை?

சட்டத்தின் 5ஆவது வாசகத்தின்மூலம் விசேடமாக குறித்துரைக்கப்பட்ட தகவல்களை மாத்திரம் பெறமுடியாது. பொதுமக்களின் நலனோடு தொடர்பற்ற தனிப்பட்ட தகவல்கள், தேசிய பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர தொடர்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தகவல்கள், இலங்கைப் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் தகவல்கள், வாணிப ரீதியில் அந்தரங்க மான தகவல்கள், தனிப்பட்ட வைத்திய அறிக்கைகள், அறக்கட்டளைகளை அடிப்படையாகக்கொண்டு செயற்படும் அந்தரங்கத் தகவல்கள் குற்றவியல் வழக்கு அல்லது தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக் கூடிய தகவல்கள், மூன்றாம் தரப்பினர் பற்றிய தகவல்கள், நீதிமன்றத்திற்கு அவமானம் ஏற்படக்கூடிய தகவல்கள், நீதிமன்றத்தின் சுயாதீனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தகவல்கள், பாராளுமன்ற சிறப்புரிமைகள் அல்லது மாகாணசபைகளின் சிறப்புரிமைகள் அல்லது சமூகத்தில் மோதல்களை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள், பரீட்சைகளின் தொடர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள், தேர்தல்கள் தொடர்பான தகவல்கள் அல்லது அமைச்சரவைப் பத்திரம் தொடர்பாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாத தகவல்கள் என்பன இவ்வகையைச் சாரும்.

ஆனால் சட்டத்தின் 5(4) வாசகத்திற்கமைய, மேலே எவ்வாறு குறித்துரைக்கப்பட்டாலும் தகவல்களை வழங்குவது **பொதுமக்களின் நலனுக்கு** காரணமாக அமையுமேயாயின் மேற்படித் தகவல்களைப் பிரஜைகள் பெறமுடியும்.

எவ்வளவு காலத்திற்குரிய தகவல்களைப் பெறமுடியும்?

சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிவரை 10 ஆண்டுகளுக்கு முன்னரான தகவல்களைப் பெறமுடியும்.

மேன்முறையீட்டு நடைமுறை என்பது யாது?

i. தகவல் அதிகாரியினால் பிரதிபலிக்கப்படும் துலங்கள் பற்றி நீங்கள் திருப்தியடையாவிடின் மேற்படி பிரதிபலிப்பு கிடைத்து **14 நாட்களுக்குள்** பெயர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

ii. பெயர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் சுட்டிக்காட்டப் பட்ட, சுட்டிக்காட்டப்படாத பிரதிபலிப்பு சம்பந்தமாக நீங்கள் திருப்தியடையாதுவிடின் மேற்படி பிரதிபலிப்பு கிடைத்து / கிடைக்காமல் **இரண்டு மாதங்களுக்குள்** தகவலறியும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய முடியும்.

எந்த அடிப்படையில் தகவல் அறியும் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்?

i. பெயர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியின் தீர்மானங்கள் தொடர்பாக நீங்கள் திருப்தியடையாதுவிடின்,

ii. பெயர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் ஒரு தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத பட்சத்தில்.

தகவலறியும் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கக்கூடிய **ஒழுக்காற்று நடவடிக்கைகள்** யாவை?

குறிப்பிட்ட தகவல் உத்தியோகத்தர் **வேண்டுமென்றே:**

- உங்களுடைய கோரிக்கையைப் பொறுப்பேற்பதை மறுக்கின்ற போது
- உங்களுடைய கோரிக்கையைப் பொறுப்பேற்பதை நிராகரிப்பதற்கான காரணங்களை குறிப்பிடாதுவிடின்
- அதிக கட்டணம் அறவிடப்பட்டால்
- உங்களது கோரிக்கையை செயற்படுத்துவதை நிராகரிக்கும் போது
- குறித்துரைக்கப்பட்ட பெயர் குறித்த அதிகாரி **வேண்டுமென்றே:**
- சட்டத்தின் 5வது வாசகத்தில் வழங்கப்பட்டுள்ள காரணங்களைத் தவிர வேறு காரணங்களின் நிமித்தம் உங்களுடைய உரிமைகள் மறுக்கப்படுமேயானால்
- நியாயமான காரணமின்றி, மேன்முறையீடு கிடைத்து மூன்று வாரங்களுக்குள் அதுபற்றிய தீர்மானத்தை எடுக்காதுவிடின், குறித்துரைக்கப்பட்ட பொது அதிகாரசபையின் அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்புடைய ஒழுக்காற்று கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு பரிந்துரைகளை செய்வதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

சட்டத்தின்கீழ், பின்வரும் தவறுகள் இடம்பெறும் பட்சத்தில் ஒரு நபருக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்திற்கு ஊடாக **சட்டரீதியான நடவடிக்கைகள்** ஆரம்பிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு ஆற்றல் உண்டு.

- தவறான, பூர்த்தியற்ற மற்றும் குறைபாடுடைய தகவல்களை வழங்குதல்.
- தகவல்களை அழித்தல், செல்லுபடியற்றதாக்குதல், மாற்றுதல் அல்லது மூடிமறைத்தல்
- தகவல் ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்ற முடியாமை.
- ஆணைக்குழு முன்னிலையில் தோற்றி, தகவல்களை வழங்குவதையோ அல்லது விசாரணையை நிராகரிக்கும் பட்சத்தில் அல்லது சத்தியப்பிரமாணத்தின்கீழ் பொய்யான தகவல்களை வழங்குதல்.
- தகவல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானத்தை வலுப்பெறச் செய்யாமை (செயற்படுத்தாமை)
- ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு தடைகளை ஏற்படுத்துதல்.

இத்தவறுகள்மீது விதிக்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவை?

- நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.
- குற்றம் நிரூபிக்கப்பட்டால் குறித்துரைக்கப்பட்ட குற்றத்தைச் செய்த தரப்பினருக்கு 50,000 ரூபாய்க்கு மேற்படாத தண்டப்பணமோ அல்லது இரண்டு வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனையோ அல்லது இரண்டு தண்டனைகளையும் வழங்க முடியும்.
- குற்றம் செய்த தரப்பினருக்கு எதிராக குறித்துரைக்கப்பட்ட ஒழுக்காற்று கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்படலாம்.

தகவல் அறியும் உரிமை தொடர்பாக உங்களுக்குத் தேவையான தகவல் பற்றி உதவுவதற்கு நாம் தயாராய் உள்ளோம்.

உடனடித் தொடர்புகளுக்கு

தகவல்களுக்கான உதவி நிலையம்

011-3030463

(கிழமை நாட்களில் முற்பகல் 09.00 மணி முதல் பி.ப.05.00 மணி வரை)

CPA
Centre for Policy Alternatives
சிவில் இயக்கங்களுக்கான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்